# எளிமையின் உச்சம் துணை முதலமைச்சர்!

புதுக்கோட்டை வடக்கு மாவட்டத்தில், புதுக்கோட்டை மாநகரச் செயலாளர் மறைந்த ஆ.செந்தில் – மாநகர மேயர் திலகவதி ஆகியோரின் புதல்வர் மாநகர இளைஞரணி அமைப்பாளர் செ.கணேஷ் திருமண விழா, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்களின் தகப்பனார் பேராசிரியர் வைரக்கண்ணு அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி, வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும் மாவட்டக் கவுன்சிலருமான மறைந்த ஸ்டாலின் நாராயணசாமி படத்திறப்பு நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 09.02.2025 அன்று புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகை தந்தார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட திமுக சார்பிலும் அனைத்து ஒன்றியங்கள் சார்பிலும் மாத்தூர் எல்லை தொடங்கி புதுக்கோட்டை வரை 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு கழக இளந்தலைவர் அவர்களை வரவேற்க இருவண்ணக் கொடிகள் பட்டொளி வீசி பறந்தது. பல்லாயிரக்கணக்கான தாய்மார்கள் கையில் பதாகைகள் ஓடும் இரு வண்ணக் கொடியோடும் எழுச்சியோடு திரண்டு நின்று, துணை முதல்வர் அவர்களே, வருக! வருக! என்று வணங்கி வரவேற்றனர்.

புதுக்கோட்டை எல்லையான மாத்தூருக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பிலும், விராலிமலை கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய ஒன்றிய திமுகழகத்தின் சார்பிலும் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் பெண்கள், இளைஞர்கள் பொதுமக்கள் பல்லாயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்று வரவேற்றனர்.

நாட்டுப்புறக் கலைஞர்கள் இசை வாத்தியங்களை இசைக்க, செண்டை மேளம் முழங்க உற்சாகமாக வரவேற்று, சாலையின் இருமருங்கிலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்று வரவேற்பளித்த பொதுமக்களைப்பார்த்து காரில் நின்றவாறே கையசைத்து, கரங்களைப் பற்றி வரவேற்பை ஏற்றுக்கொண்டார் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

தொடர்ந்து, கீரனூரில் குன்றாண்டார்கோவில் கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய ஒன்றியக் கழகத்தின் சார்பிலும், கீரனூர் பேரூர் கழகத்தின் சார்பிலும் ஒத்தக்கடையில் இருந்து கல்லுக்குமியல்பட்டி வரை பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு நின்று மகிழ்ச்சி வெள்ளத்தில் வரவேற்பு அளித்தனர்.

நரிக்குறவர் இனமக்கள் 100 க்கும் மேற்பட்டோர் திரண்டு நின்று துணை முதலமைச்சர் அவர்களுக்கு பாசி மாலை அணிவித்தனர். அப்பொழுது, நான் கோர்த்த பாசிமாலையை அணிந்து கொண்டார் என 40 வயது மதிக்கத்தக்க நரிக்குறவர் பெண் கைதட்டி சொல்லி, தனது ஒட்டு மொத்த மகிழ்ச்சியை தனது சிரிப்பின் மூலம் வெளிப்படுத்தினார். அங்கிருந்த மற்ற பெண்களும் துள்ளிக்குதித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது கழக இளம் தலைவர் அவர்கள் எல்லா தரப்பு மக்களையும் கவர்ந்து உள்ளார் என்பதற்கு சாட்சியாக அமைந்தது. அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒட்டுமொத்த பெண்களின் அன்பைப் பெற்றிருப்பதை நேரில் உணர முடிந்தது.

வரும் வழியில் பொதுமக்களின் கரங்களைப் பற்றி இன்முகத்துடன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். பொதுமக்கள் போட்டி போட்டுக்கொண்டு, அண்ணா… தலைவா… சின்னவரே…. துணை முதலமைச்சரே… நீங்கள் வாழ்க! என்று வாழ்த்தியது அடித்தட்டு மக்களின் மனதில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் இருக்கிறார் என்பதை எடுத்துக் காட்டியது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் எளிமையை கண்டு அனைவரும் வியந்து நின்றனர்.

மேலப்புதுவயல் முக்கத்தில், நாட்டுப்புறப் பாடகர் இளையராஜா, ‘உதயநிதி… உதயநிதி’ என்ற பாடலைப் பாடிக்கொண்டிருந்த போது, இளந்தலைவர் அவர்கள் இளையராஜா அவர்களைப் பார்த்து கையசைத்து மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இதனைக் கண்ட கழகத்தோழர்கள் அனைவரும் நடனமாடிக்கொண்டே அவரை வரவேற்றது கண்கொள்ளாக் காட்சியாக அமைந்திருந்தது.

குன்றாண்டார்கோவில் மத்திய ஒன்றிய கழகத்தினர் வாழ்க! வாழ்க ! வாழ்கவே! சின்னவர் வாழ்கவே! என்று கோசமிட்டுச் சொன்ன முழக்கங்களை கேட்டு, வரவேற்புக்கு வந்த பொதுமக்களும் சின்னவர் வாழ்கவே! என்று சொன்னது உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது.



அதனைத் தொடர்ந்து. சமூகநீதியை வலியுறுத்தும் வகையில் மாரத்தான் போட்டிகளையும், கழக இளந்தலைவர் பிறந்த நாளுக்கு வருடா வருடம் பாரம்பரிய கலை நிகழ்ச்சி மற்றும் வீர விளையாட்டு சாகசங்களை நிகழ்த்திக் காட்டுகின்ற சேதுபதி சிலம்பாட்ட குழுவினர் உள்ளிட்ட மாணவர்களிடம் கைகுலுக்கி வரவேற்பை பெற்றுக்கொண்டார். அப்பொழுது அவர்கள் சிலம்பக்கம்புகளை உயர்த்திப்பிடித்து ‘தமிழக. விளையாட்டு வீரர்களின் தலைவரே’ வாழ்க! வாழ்க ! ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர். அண்மையில் நடந்த சி.எம். டிராபி கோப்பையை வென்ற செல்வி.தவப்பிரியா அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்த துணை முதல்வர் அவர்கள், நாட்டுப்புறக் கலை சங்கமத்தில் வென்ற சேதுபதி சிலம்ப பாசறை ஒருங்கிணைப்பாளர் சிலம்பம் கார்த்திக் அவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து, அம்மாசத்திரம் பகுதிக்கு வந்த பொழுது, அன்னவாசல் தெற்கு மற்றும் வடக்கு ஒன்றியக் கழகத்தின் சார்பிலும் , இலுப்பூர் பேரூர் மற்றும், அன்னவாசல் பேரூர்க் கழகத்தின் சார்பிலும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் பெண்கள், இளைஞர்கள் பொதுமக்கள் என அனைவரும் இருவண்ணக்கொடி களையும், பதாகைகளையும் கையிலேந்தி, அம்மாச்சத்திரம் முதல் அண்ணாப்பட்டி வரை திரண்டு நின்று எழுச்சி மிகு உற்சாகத்துடன் வரவேற்றனர். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள், காரில் நின்றவாறே அனைவருக்கும் வணக்கம் சொல்லி கைகுலுக்கி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டே சென்றார்.

புதுக்கோட்டை நகர எல்லையான, கருவேப்பிலான் ரயில்வே கேட் பகுதியில், புதுக்கோட்டை தெற்கு, கறம்பக்குடி தெற்கு, கறம்பக்குடி வடக்கு புதுக்கோட்டை வடக்கு கறம்பக்குடி பேரூர் ஆகிய கழக அமைப்புக்களைச் சேர்ந்த நிர்வாகிகள், கழக முன்னோடிகள் இளைஞர்கள், பெண்கள், பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் வரவேற்றனர். அப்பொழுது பெண்கள் மாண்புமிகு துணை முதலமைச்சரை உச்சி முகந்து வாழ்த்தி வரவேற்றனர். நாட்டுப்புறக்கலைஞர்கள் மற்றும் கரகாட்டக் குழுவினகள் நடனமாடி வாழ்க சின்னவர் ! வாழ்க சின்னவர் என்று கோஷம் போட்டு தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தொடர்ந்து, புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் இடைவெளி இல்லாமல் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர், திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் கோவில் பகுதியில் இருந்து மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் வரை இருவண்ணம் தாங்கிய பலூன்களை உயர்த்திப்பிடித்து மாண்புமிகு கழக இளந்தலைவர் அவர்களை மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

மணமேல்குடி ஒன்றிய கழகத்தின் சார்பில், முத்தமிழ் அறிஞர் கலைஞர், மாண்புமிகு கழகத் தலைவர், மாண்புமிகு கழக இளந்தலைவர் மற்றும் உதயசூரியன் சின்னம் பொறித்த குடையை உயர்த்தி பிடித்துக் கொண்டு கழகத் தோழர்களும் பொதுமக்களும் திரண்டு நின்று வரவேற்றனர்.

மகளிரணி உள்ளிட்ட மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் பெருந்திரளாக நின்று வரவேற்பளித்தனர்.

தொடர்ச்சியாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம் முதல் ஏடிஆர் திருமண மண்டபம் வரை மாநகர எல்லை முழுவதும், மாநகரக் கழகம் சார்பில் மாநகர கழக நிர்வாகிகள், நாட்டுப்புறக் கலைஞர்களின் நடனத்துடன் இளந்தலைவர் வாழ்க! இளந்தலைவர் வாழ்க! என்ற முழக்கங்க ளோடு மேளதாளம் முழங்க மகிழ்ச்சியோடு வரவேற்றனர்.

திருமண மண்டபத்திற்கு முன்பாக, மாவட்ட இளைஞரணி சார்பில் உள்ளிட்ட இளைஞரணியினர் திரண்டு நின்று ஆரவாரத்துடன் வாழ்த்தி வரவேற்றனர்.

திருமண மண்டபத்திற்குள் நுழைந்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை மறைந்த செந்தில் குடும்பத்தினர், மேயர் திலகவதி தலைமையில் பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர்.



மறைந்த மாநகர கழக செயலாளர் ஆ.செந்தில் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர், புதுக்கோட்டை மாநகரச் செயலாளர் மறைந்த ஆ.செந்தில் – மாநகர மேயர் திலகவதி ஆகியோரின் புதல்வர் மாநகர இளைஞரணி அமைப்பாளர் செ.கணேஷ் திருமணத்தை நடத்தி வைத்து ‘தந்தை பெரியாரும் பகுத்தறிவும் போல’, ‘பேரறிஞர் அண்ணாவும் மாநில சுயாட்சியும் போல’, ‘முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரும் திராவிட முன்னேற்ற கழகமும் போல’, ‘நம் தலைவரும் உழைப்பும் போல’ பல்லாண்டு வாழ்க! என்று மணமக்களை வாழ்த்தினார்.

அப்போது பேசிய இளந்தலைவர் அவர்கள், திராவிட மாடலின் சாதனைகளை பட்டியலிட்டு குறிப்பாக பெண்களுக்கான சாதனைகளை பட்டியலிட்ட பொழுது மனவிழா அரங்கத்தில் இருந்த பெண்கள் அனைவரும் கரவொலி எழுப்பி ஆரவாரத்துடன் தங்களது மகிச்சியை வெளிப்படுத்தினர். 7 ஆவது முறையாக கழக ஆட்சி அமைய கழகத் தோழர்கள் இப்போதிலிருந்தே உழைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு எழுச்சியுரையாற்றினார். தொடர்ந்து பேசிய இளந்தலைவர் அவர்கள், மறைந்த செந்தில் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று சொன்னதோடு, கழகத்தோழர்களுக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் ‘நான் இருக்கிறேன்’ என்று சொன்னது அனைவருக்குமான ஆறுதலாக அமைந்திருந்தது.

மேடையில், மாண்புமிகு அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, சிவ.வீ.மெய்யநாதன், நடிகர் தம்பி ராமையா, தஞ்சை மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா, சட்டமன்ற உறுப்பினர்கள் முத்துராஜா, நீலமேகம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், பெரியண்ணன் அரசு, திருச்சி மாநகரச் செயலாளர் மேயர் அன்பழகன், சண். ராமநாதன், மாநில நிர்வாகிகள் கவிதை பித்தன், சந்திரசேகரன், புதுக்கோட்டை விஜயா, அஞ்சுகா மீனாட்சி சுந்தரம், சுபாஷ் சரவணன், அசோக் பாண் டியன், வி.என்.மணி, கே.ஆர்.என்.போஸ், அரசகுமார், வழக்கறிஞர் ராமநாதன், பரணி கார்த்திகேயன், மருத்துவர் அண்ணா மலை, மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர் இளையராஜா உள்ளிட்டோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.

திருமண மண்டபத்திலிருந்து புறப்பட்டு, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா இல்லத்திற்கு செல்லும் வழியில், கலைக்குழுவினர் முத்து முகமது அவர்களின் இன்னிசைக் கச்சேரியுடனும், கிராமிய நடனத்துடன் மாண்புமிகு இளந்தலைவர் அவர்களை வரவேற்றனர். இரு வண்ணக்கொடிகளையும், தலைவர் மற்றும் இளந் தலைவர் பதாகைகளையும் உயர்த்திப்பிடித்தபடி ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்களின் தகப்பனார் பேராசிரியர் வைரக்கண்ணு அவர்களின் உருவப்படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்தினார்.

பின்னர், ராஜம் திருமண மண்டபத்திற்குள் நுழைந்தவுடன் மண்டபத்தில் கூடியிருந்த அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்தினர். வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளரும், மாவட்ட கவுன்சிலருமான மறைந்த ஸ்டாலின் நாராயணசாமி அவர்களின் உருவப்படத்தினை திறந்து வைத்து அவரது குடும்பத்தினருக்கும், குழந்தைகளுக்கும், ஒருங்கிணைந்த கந்தர்வகோட்டை ஒன்றிய கழகத் தோழர்களுக்கும் ஆறுதல் தெரிவித்தார். பின்னர் வடக்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூபாய் 5 லட்சமும் தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூபாய் 5 லட்சமும் அந்த குடும்பத்தாருக்கு வழங்கி தன்னுடைய ஆறுதலை தெரிவித்தார்., நிகழ்வில், கந்தர்வகோட்டை தெற்கு மற்றும், கந்தர்வகோட்டை வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 60 கிலோமீட்டர் தூரம் பயணித்து லட்சக்கணக்கான பல தரப்பு மக்களை சந்தித்து, சிறிதும் சளைக்காமல், முகம் சுளிக்காமல் இன்முகத்தோடு இளைஞர்கள், மாணவர்கள், பெண்கள் மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் சந்தித்து அனைவரது கரங்களைப் பற்றிய காட்சி, மறுநாள் புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் டீக்கடை பேச்சாகவே அமைந்துவிட்டது.

வரவேற்பளித்த பொதுமக்கள் ஆர்வத்தில் கை குலுக்கிய போது அவர்கள் நகங்கள் பட்டு காயமுற்றதைக் கண்ட எங்களுக்கு பதட்டமாக இருந்தாலும், இளம் தலைவர் அவர்கள் அதனை சிறிதும் பொருட்படுத்தாமல் அனைவரது கரங்களையும் பற்றி, அடித்தட்டு விளிம்பு நிலை பொதுமக்களுக்கு ‘நான் இருக்கிறேன்’ என்று சொன்ன காட்சி நெகிழ்ச்சியானதாக அமைந்தது.

மறுநாள் தேநீர் கடைகளிலும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் இளம் தலைவர் அவர்களின் அணுகுமுறைகளை புகழ்ந்து பேசிய பொதுமக்கள் தன்னுடைய பதவிக்கான ஆடம்பரம் ஏதும் இல்லாமல் எளிமையாக பயணித்த அவரது நடவடிக்கைகளைப் பார்த்த மக்கள் ‘அவரது கரங்களைப் பற்றி அவரது எளிமையைப் பாராட்டியதோடு,

‘இவர்தான் நமக்கான தலைவர்’

‘எளிமையின் உச்சம் அண்ணன் உதயநிதி’ என்று உணர்ந்து சிலாகித்து பேசியதை, புதுக்கோட்டை மாவட்டம் முழுவதும் உணர முடிந்தது.

இவர்தான் ‘தமிழ்நாட்டின் அடுத்த தலைமுறைத் தலைவர்’ என மகிழ்ந்து நெகிழ்ந்து வாழ்த்தினார்கள்! மாண்புமிகு கழக இளந்தலைவர் அவர்களின் நிழலில் நின்ற பெருமகிழ்ச்சி ஏற்பட்டது. ●

**வழக்கறிஞர்**
**கே.கே.செல்லபாண்டியன்**
செயலாளர்
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.



கடலூர் மாவட்டம், கடலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கே.என்.பேட்டை பவானி அம்மாள் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் நடைபெற்ற “மக்களுடன் முதல்வர் திட்டத்தின் கீழ் 3ஆம் கட்ட சிறப்பு முகாமினை வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் ஆகியோர் நேற்று (15.02.2025) துவக்கிவைத்து, பார்வையிட்டனர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், கடலூர் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.விஷ்ணுபிரசாத், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, மாநகராட்சி துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட வருவாய் அலுவலர்ம. இராஜசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் திருமதி இரா.சரண்யா, உட்பட பலர் உள்ளனர்.



உளுந்தூர்பேட்டை ஒன்றிய கழக செயலாளர் ஜி.ஆர்.வசந்தவேல் இல்ல திருமண விழாவில் மணமக்கள் டாக்டர் சந்திரபோஸ், மணமகள் டாக்டர் சுவேதா ஆகியோருக்கு கழகத்தின் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வாழ்த்து தெரிவித்தார். உடன் சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், பொதுக்குழு உறுப்பினர் பாஸ்கரன் குடும்ப உறுப்பினர்கள் இருந்தனர்.